**திரப்பன பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திரப்பன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் திரப்பன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 சனவரி 01 இற்கு பின்னர் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்த 08 வகையான செத்துக்கள் தொடர்பான பெறுமான தேய்வு ரூபா.20,792,412 ஆக காணப்பட்ட போதிலும் அது ரூபா.24,611,094 ஆக கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | சரியான பெறுமதி கணக்கிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட கடை வாடகை ரூபா.1,122,450 ஆக காணப்பட்ட போதிலும் அது முற்றடங்கல் வருமானக்கூற்றில் ரூபா.1,185,344 ஆக கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | எல்.டி.எஸ்.பி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் பிடிகாசு ரூபா.760,875 பொது வங்கி கணக்கில் பதியப்பட்டமையால் அது பெறப்படவேண்டிய நடைமுறை சொத்தாக அடையாளம் காணப்பட்டுள்ளது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்கப்பட்ட பட்டியல்களின் கூட்டு மொத்தத்திற்கும் நிதிக்கூற்றில் காணப்படுகின்ற 09 கணக்கு மீதிகளுக்கும் இடையே ரூபா.6,093,682 வேறுபாடு காணப்படுகின்றது. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | பட்டியல்கள் தொடர்புடைய பதிவேடுகளுடன் இணக்கப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| | விடயம் | பெறுமதி | சமர்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. | | | |
| (அ) | கழிவகற்றல் வரி | 437,320 | i. விரிவான பட்டியல்<br>ii. கால பகுப்பாய்வு | ஏற்றுக்கொள்ளப்படு கிறது. | எழுத்து மூலமான ஒப்பாய்வு ஆவணம் சமர்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடை வாடகை நிலுவைகள் | 8,980 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | இறைச்சிக்கடை வாடகை நிலுவை | 90,192 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | நூலக வைப்பு பணம் | 39,440 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | நானாவீத வைப்புக்கள் | 2,115,609 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.2,871,785 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா.5,198,874 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலங்கள்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| **(i)** | வீதவரியும் வரியும் | 770,000 | 909,130 | 507,815 | 612,324 | 908,200 | 830,738 | 796,362 | 211,009 |
| **(ii)** | வாடகை | 7,247,000 | 5,400,744 | 4,239,992 | 1,819,757 | 6,283,000 | 3,592,075 | 3,023,262 | 659,005 |
| **(iii)** | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 3,829,250 | 3,134,136 | 1,234,136 | 8,597,026 | 3,508,000 | 1,533,050 | 3,200,708 | 6,697,026 |
| **(iv)** | ஏனைய வருமானம் | 8,262,645 | 5,593,443 | 3,037,758 | 5,320,107 | 7,202,990 | 3,647,962 | 4,933,918 | 2,764,422 |
| | **மொத்தம்** | 20,108,895 | 15,037,453 | 9,019,701 | 16,349,214 | 17,902,190 | 9,603,825 | 11,954,250 | 10,331,462 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழ் வருமாறு

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| 2023 திசெம்பர் 31 இல் அறவிவதற்கு நடவடிக்கை நிலுவைகளையும் நிலுவையாகவுள்ள மதிப்பீட்டு வரி மேற்கொள்ளப்படவுள்ளது. அறவிவதற்கு நடவடிக்கை | | |

| | | |
|---|---|---|
| ரூபா.124,871 மற்றும் கழிவகற்றல் வரி ரூபா.437,320 இனை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | மேற்கொள்ளப்பட்ட வேண்டும். |

**(ஆ) வாடகை**

| | | |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான சொத்துக்களை வாடகைக்கு விடப்பட்டமைக்கான கடை வாடகை நிலுவை ரூபா.518,586, இயந்திர குத்தகை வாடகை நிலுவை ரூபா.757,150, நிலுவை வீட்டு வாடகை ரூபா.8,980 மற்றும் நிலுவை இறச்சிக்கடை குத்தகை ரூபா.90,190 ஆகியன மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | நிலுவைகளையும் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும். |

**(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட சுற்றுலா விடுதிகளிலிருந்து பெறப்பட வேண்டிய அனுமதிக் கட்டணமான ரூபா.8,597,026 இனை அறவிட்டுத் தருமாறு சபையினால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. | இத்தொகையை அறவிடுவதற்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | வழக்கிற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டு இத்தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும். |

**(ஈ) நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

| | | |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் மாகாணசபையின் பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தான நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் ரூபா. 892,504 மற்றும் முத்திரை தீர்வை ரூபா.4,011,100 அறவிடப்பட்டிருக்கவில்லை. | உறுதிப்படுத்தல்கள் கிடைக்கப்பெற்றதும் இத்தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது | சபைக்கு கிடைக்கப்பெற வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் செயற்றிறன்

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப்பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் காணப்படுகின்ற 30 முக்கிய விடயங்களை நிறைவேற்றுவதற்கான உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும் 2023 திசெம்பர் 31 வரை அவ்விதமான உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 சனவரி 16 ஆம் திகதி கப் வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக பழுதுபார்த்தல் செலவு ரூபா.32,500 ஏற்பட்டிருந்து மற்றும் 2019 மார்ச் 30 ஆம் திகதி கப் வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக ரூபா.4,800 பழுதுபார்த்தல் செலவு ஏற்பட்டிருந்து இருப்பினும் நிதி பிரமாணம் 104 மற்றும் 105 ஆகியவற்றிக்கு அமைவாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரை கண்டறிந்து இழப்பீட்டினை பெறுவதற்கான ஆரம்ப மற்றும் இறுதி விசாரணைகள் நடத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணமத்திற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால் அது மீளப்பெற முடியவில்லை. | நிதிப் பிரமாணமத்திற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான லபுனொறுவ நூலகம் மூடப்பட்டிருந்ததுடன் அதற்காக சபையின் ஊழியர் ஒருவரை ஈடுபடுத்தி, நூலகத்தினை திறப்பதற்குமான தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திறப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | திறப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபையின் எல்லைகுட்பட்ட பகுதிகளில் வீதி விளக்குகள் பொருத்துதல் அது தொடர்பான திருத்தப்பணிகள் மற்றும் அது தொடர்பான பொதுமக்கள் முறைப்பாடுகள் கையாளுதல் என்பன முற்றாக கைவிடப்பட்டிருந்தது. | இதற்காக ஓர் ஊழியரை பணிக்கமர்த்துவது தொடர்பாக அனுமதியினை பெறுவதற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. | வீதி விளக்குகள் பொருத்துதல் தொடர்பான செயற்பாடுகள் தொடர வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தமான முறியக்கடவளையில் உள்ள 04 கடைகளுக்கு 2023 ஆம் ஆண்டிற்கான பட்டியலிடப்பட்ட போதிலும் குறித்த கடைகள் தொடர்பாக தேவையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை மற்றும் ஒப்பந்தங்களினை புதுப்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | ஒப்பந்தம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 ஒக்டோபர் தொடக்கம் 2022 திசெம்பர் வரையிலான காலப்பகுதியில் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்பு தொகையினை தாமதமாக செலுத்தியமைக்காக செலுத்த வேண்டிய மிகைக்கட்டணம் ரூபா.99,077 இனை செலுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மிகைக்கட்டணத்தினை செலுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | மிகைக்கட்டணத்தினை செலுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான நாச்சதுவவில் அமைந்துள்ள 10 கடைகளுக்கு சபை அதிகாரிகள் போதியளவிலான கவனம் செலுத்தாமையினால் குத்தகைதாரர்கள் தங்களது விருப்பத்திற்கு அமைவாக கட்டுமானங்களினை மாற்றியமைப்பதுடன் மற்றும் ஒப்பந்தங்கள் உரியமுறையில் இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை மற்றும் நிலுவை வாடகைகளை அறவிடுவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தங்களை இற்றைப்படுத்தி நிலுவை வாடகைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | ஒப்பந்தங்களை இற்றைப்படுத்தி நிலுவை வாடகை தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டில் அதுங்கமவில் ரூபா.1,431,543 செலவில் நிர்மானிக்கப்பட்ட கடையும் டயகமவில் ரூபா.1,472,920 செலவில் நிர்மானிக்கப்பட்ட கடையும் குறித்த கடைகளுக்கான கூரைகள் இடப்படாடையினால் அவை விளைவற்று காணப்படுகின்றது. | குறித்த கடைகளை புணரமைப்பதற்கான நிதிப்பற்றாகக்குறை காணப்படுகின்றது. | குறித்த கடைகளை புணரமைப்பதற்கான தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தத்தின் ஊடாக வருமானம் ஈட்டும் செயற்பாட்டிற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

# 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

## 4.1 வருடாந்த செயற்திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வரவு செலவுத்திட்த்தின் பிரகாரம் சபையினால் மேற்கொள்ளவுள்ள செயற்பாடுகள் தொடர்பாக வருடாந்த செயற்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் பிரதேச சபைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் அத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. . | செயற்திட்டமானது சரியாக தயாரிக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 4.2 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபை மற்றும் நச்சதுவ கால்நடைகள் அறுவை நிலையத்திற்கு சொந்தமான கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்தான சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான நடவடிக்கை மீளாய்வாண்டிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த இடங்களில் காணப்படுகின்ற குறைபாடுகள் நீக்கப்பட்ட பின்னர் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான பரிந்துரைக்கப்பட்ட குறைபாடுகளை நிவர்தி செய்து சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |